பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 10 ஞாயிற்றுக்கிழமை 26.11.2023 கதிர் 380

# மாவீரர் நினைவேந்தல்களை தடுப்பதில் பொலிஸ் மும்முரம்

## முல்லைத்தீவில் வாய்த்தது கிளி, மன்னாரில் வாய்க்கவில்லை

**மாவீர்களுக்கான நினைவேந்தலை தடை செய்யுமாறு கோரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை கிளிநொச்சி, மன்னார் நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளதோடு, யாழ்ப்பாண நீதிமன்றம் நாளை திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாகஅறிவித்துள்ளது.இதேவேளை,முல்லைத்தீவில் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கு 7 பேருக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**இதேநேரம், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அக்கட்சியின் செயலாளர், நாடாளுமன்றஉறுப்பினர்செல்வராசா கஜேந்திரன் பங்கேற்புடன் நிகழ்ந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில்** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்குவழங்கப்பட்ட சேவை நீடிப்புக் காலம் நேற்று நள்ளிரடன் முடிவுக்கு வந்துவிட்டது. அவருக்கு ஏற்கனவே 4 தடவைகள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுவிட்டது. அதில் இரண்டு தடவைகள் வழங்கப்பட்ட பதவி நீடிப்பை அரசமைப்புப்பேரவைஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. அதுமட்டுமல்லஅப்படி அவருக்குப் பதவி நீடிப்பு வழங்குவது அரசமைப்புக்கு விரோதமானது என்றும் தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில் புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிப்பதற்கு அரச உயர்மட்டத்தில் ஆலாசனைகள் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மொட்டுக் கட்சியும் இலங்கைப் ☞ 2

## தொடரும் மழையால் 2 லட்சம் பேர் பாதிப்பு

நாட்டில் பதிவான பலத்த மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 51,572 குடும்பங்களைச் சேர்ந்த 2,17,900 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில், கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளமைதெரியவந்துள்ளது. அனர்த்தங்களினால் 51 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 103 பேர் காயமடைந்துள்ளனர்.

சுமார் 10,100 வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கான வினைத்திறனுடன் கூடிய சேவைகளை வழங்குவதற்காக 181 பாதுகாப்பு முகாம்கள் ☞ 2

## நிலங்களை இந்தியாவிற்கு விற்காதே வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கால்நடை வளங்கள் மற்றும் விவசாய நிலங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டுமென வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தம்புள்ளவில் உள்நாட்டு பாற்பண்ணை மற்றும் விவசாயத்தைப் பாதுகாக்கும் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம்இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தம்புள்ள நகரில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, போரட்டத்தினை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் இல்லை. ஆனால் நகருக்குள் பேரணியாக செல்ல முடியாது என்று தம்புள்ள ஹம்முதாவ பகுதியில் வைத்து போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தினார்கள்.

எனினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பொலிஸாரின்அறிவுறுத்தலை மதிக்காது பலாத்காரமாக நகருக்குள் பிரவேசித்ததாக உயர் மட்டங்களுக்கு தகவல் வழங்குங்கள் என்று குறிப்பிட்டதோடு எமது பேரணியை தடுக்க வேண்டாம் என்றும் கோரினார்கள்.

அதனைத்தொடர்ந்து பொலிஸாரின் அறிவுறுத்தல்களை கடந்து, தம்புள்ளை நகரத்தின் மணிக்கூட்டு கோபுரம் வரையில் அவர்கள் பேரணியாகச் சென்றதோடு நாட்டின் பண்ணையாளர் களையும், விவசாயிகளையும் பாதுகாக்குமாறு கோசங்களை எழுப்பினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் உருவ பொம்மைகளையும் தாங்கியவாறு போராட்டத்தினை ஒருமணி நேரத்துக்கும் அதிகமாக முன்னெடுத்து பின்னர் அமைதியாக கலைந்து சென்றனர்.

## முழு உரிமை காணிப் பத்திரம் பெப்ரவரி 4 முதல் விநியோகம்

### ஜனாதிபதி அறிவிப்பு

அனுமதிப்பத்திரம் பெற்றகாணிஉரிமையாளர்களுக்குமுழுஉரிமை கொண்ட காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு, பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர தினத்திற்கு இணையாக நாடு பூராகவும் ஆரம்பிக்கப்படும்எனஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

மாவட்டஅபிவிருத்தி நிதியை மாவட்டக் குழுவிடம் ஒப்படைக்க இந்த ஆண்டு எதிர்பார்க்கிறோம். மேலும், மலையகத்தில் அபிவிருத்தி செய்யப்படாத பிரதேசங்களின் அபிவிருத்திக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் தலா 10 மில்லியன் ரூபா வழங்கப்படுகின்றது. அடுத்த 05 வருடங்களும் அதனைத் தொடர்ந்து வழங்க எதிர்பார்க்கின்றோம்.

கொவிட் தொற்று நோய்மற்றும்கடந்தகால பொருளாதார நெருக்கடி காரணமாக, பல்வேறு திட்டங்கள் இடைநடுவே நிறுத்தப்பட்டன. வங்குரோத்து நிலையில் இருந்துமீண்டுவிட்டதாக உறுதியடைந்த பிறகு, இந்த ஆண்டு ☞ 8

## வட்டு. இளைஞன் அலெக்ஸ் கொலை வழக்கில் 4 பொலிஸார் நேற்று கைது

### நாளைவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

வட்டுக்கோட்டை இளைஞன்நாகராசா அலெக்ஸ் உயிரிழந்தமைக்கு அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலே காரணம் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவரைத் தாக்கினார்கள் என்கிற சந்தேகத்தில் ஒரு உப பரிசோதகர் உட்பட நான்கு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் ☞ 9

## மின்சார சபைக்கு டிசெம்பரில் மழையால் லாபம் கிடைக்கும்

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

மின்சார சபை தொடர்ந்தும் 12 பில்லியன் ரூபா நட்டத்தில் உள்ளதோடு தற்போதைய மழை வீச்சியின் மூலம்மின்சாரசபையின் டிசெம்பர் மாத நிதி அறிக்கையின் பிரகாரம் ஓரளவு செயற்பாட்டு இலாபம் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள்சந்திப்பில்கருத்துத் தெரிவிக்கும்போதே மின்சக்தி ☞ 8

## தம்மைப் பற்றி மாத்திரம் சிந்திப்பதை தவிர்த்து எதிர்க் கட்சிகள் ஆளும்தரப்புடன் இணையட்டும்

### இப்படி அழைக்கிறார் ஜனாதிபதி ரணில்

எதிர்கால சந்ததியினருக்காக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலைமை காணப்படுகையில் எதிர்க்கட்சிகள் தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திப்பதை தவிர்த்து, ஆளும் தரப்புடன் இணைந்து செயற்படுவதே சிறந்த வழியாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட பிரதேச அரசியல் பிரதிநிதிகளுடன் நேற்று பிற்பகல் மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2021இல் ஒரு நாடு என்ற வகையில் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டோம். 2022 இல், இது ஒரு நெருக்கடியாக மாறியது. நாட்டின் அனைத்து விவகாரங்களும் முடங்கியது. நாடு பணத்தை இழந்தது. வருமானம் இல்லாமலானது. அதே நேரத்தில், அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் நிறுத்தப்பட்டன.நாம்வங்குரோத்து அடைந்த நாடாக மாறியதால், வெளிநாடுகளின் உதவியையும் இழந்தோம்.

அந்தச் சவாலான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்போம் என்று சொன்னவர்கள் கைவிட்டுச் செல்லும்பொது, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன்போது, அரசியல் வேறுபாடின்றி அனைத்துக் கட்சிகளும் எனக்கு உதவின. எவ்வாறாயினும், நாங்கள்ஒன்றிணைந்து இந்த சவாலை எதிர்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றோம்.

நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, வீழ்ச்சியடைந்துள்ள இந்தப்பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப 04 - 05 வருடங்கள் ஆகும் என்றுபலர்கூறினார்கள். இதற்குத் தீர்வு இல்லை என்று பலர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர். நாங்கள் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனும் ஏனையநாடுகளுடனும் பேச்சுநடத்திவருகிறோம்.

அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் நாடுவங்குரோத்து என்ற முத்திரையில் இருந்து விடுபடும் என நான் எதிர்பார்க்கிறேன். இந்த நடவடிக்கைகளுக்காக எங்களுக்கு16மாதங்கள் தேவைப்பட்டன. எதிர்க்கட்சிகள் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

படைத்தரப்புக்களும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸும் அவருக்கு ஆதரவாகவே இருக்கின்றார்கள். பதவி நிலை மூப்பின் அடிப்படையிலும் அவருக்கு அடுத்த பொலிஸ் மா அதிபராகுவதற்கான தகுதிகள் உள்ளன. ஆனால் சிவில் அமைப்புக்கள் அவர் மீது தொடர்ச்சியாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றன. அரகலய சமயத்தில் அவர் நடந்துகொண்ட விதம் குறித்தும் கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன.

முதல் தடவை அவரைப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்போகிறார்கள் என்றதும் அதற்கெதிராக சிவில் அமைப்புக்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து அறிக்கைகளை வெளயிட்டன. இதனாலேயே அவரை அந்தப் பதவிக்கு நியமிப்பதை ரணில் ஒத்தி வைத்தார்.

இதையடுத்தே தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டிவிக்ரமரத்னவுக்கு சேவை நீடிப்பு வழங்கும் படலம் தொடங்கியது. தொடக்கத்தில் தலா மூன்று மாதங்கள் வீதம் இரண்டு தடவையும் பின்னர் தலா மூன்று வாரங்கள் வீதம் இரண்டு தடவையுமாக நான்கு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இறுதியாக இரண்டு தடவைகள் சேவை நீடிப்புக்கான அனுமதிய அரசியலமைப்பு பேரவையிடத்தில் கோரப்பட்ட போது, பேரவையானது, ஏகமனதாக புதிய பொலிஸ் அதிபரை நியமிக்குமாறு வலியுறுத்தியது. இந்த விடயத்தில் பேரவை தன்னுடன் ஒத்துப்போகவில்லை என்கிற கடுப்பில்தான், அதன் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படும் என்று ரணில் அறிவித்தார்.

இந்நிலையில், தான் தேசபந்து தென்னக்கோனை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இப்போது தகவல்கள் குறிப்பிடுகின்றன. ஏனைய தரப்புக்களின் அழுத்தங்களைச் சமாளிக்க முடியாத நிலையில் தென்னக்கோனுக்கு அந்தப் பதவியைக் கொடுக்க ரணில் முடிவு செய்துவிட்டார் என்று சொல்லப்படுகின்றது. அப்படி நடந்தால் கடும் எதிர்ப்புக்களை ஜனாதிபதி சந்திக்க வேண்டியதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

புதிய பொலிஸ் அதிபர் பதவிக்கான நியமனத்துக்கு தகுதி உடையவர்களாக லலித் பதிநாயக்கமற்றும் நிலந்தஜயவர்தன ஆகியோரும் உள்ளனர். அவர்களில் ஒருவரை ஜனாதிபதி பொலிஸ் மா அதிபராக நியமிக்க முடியும். ஆனால் படைத்தரப்பும் பெரமுனவும் அவர்களை விரும்பவில்லை. பேரினவாதத்தின் காலவராக தென்னக்கோனே இருப்பார் என்று அவை உறுதியாக நம்புகின்றன. இரண்டு பக்கங்களுக்கும் நடுவில் ரணில் மாட்டிக்கொண்டுள்ளார். அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தலையும் வைத்துக்கொண்டு எந்தத் தரப்பினரையும் பகைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை என்பதே பதவியில் இருந்தவருக்கான பதவிநீடிக்கப்பட்டதற்கான காரணம். நிலமையைச் சமாளிக்க ரணில் என்ன நரித்தனம் செய்யப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைந்த பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தினர். ஜனநாயகப்போராளிகள் கட்சி ஏற்பாடு செய்த நிகழ்வு தொடங்குவதற்கு முன்னதாகவே அந்தக் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் கைது செய்யப்பட்டார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரிகள் ஒன்றிணைந்து கிளிநொச்சி நீதிவான் மன்றில் மாவீரர்கள் நினைவேந்தலை தடுத்தல், பொதுத் தொல்லையை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்களை குறிப்பிட்டு தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்றைய தினம் இடம்பெற்றிருந்த நிலையில், பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் முற்பட்டு வாதங்களை முன்வைத்தார். அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏழு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நேற்று (நேற்று முன்தினம்) தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்களை நினைவு கூருகின்றார்கள். ஆகவே பொதுத்தொல்லைகளை அகற்றுகின்ற சட்ட ஏற்பாட்டின் கீழ் அதற்கான தடை உத்தரவினைக் கோரியிருந்தார். மருதங்கேணிப் பொலிஸார் என்னையும் பிரதிவாதியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையிலர் மாவீரர்களின் பெற்றோர்கள் சார்பிலும், என்னுடைய சார்பிலும், நானும் சட்டத்தரணி கே.சயந்தனும் பல இளநிலை சட்டத்தரணிகளும் மன்றில் ஆஜராகியிருந்தோம்.

பொலிஸாரின் தடை அனுமதிக்கான விண்ணப்பம் தொடர்பில் நாம் எதிர்ப்பினை வெளியிட்டோம். குறிப்பாக பொதுத்தொல்லைகளை அகற்றுதல் என்ற விடயமானது பொதுமக்களுக்கு இடையூறு அளிக்கும் வகையில் இருந்தால் மட்டுமே அச்சட்டத்தினை பயன்படுத்த முடியும். இந்த விடயத்தில் அப்படி எதுவும் நடக்கவில்லை. நினைவு கூருதலுக்குத் தடை விதிப்பதற்காக அந்தச் சட்டத்தினைப் பயன்படுத்த முடியாது என்பது எமது அடிப்படை வாதமாக இருந்தது.

அதுமட்டுமன்றி இலங்கை அரசியலமைப்பின் 14ஆவது உறுப்புரையின் கீழ் மிகத்தெளிவாக ஒன்றுகூடுதலுக்கான உரித்து சகலருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக 14(1) உ பிரிவில் சமய சடங்குகளை ஆற்றுவதற்காக தனித்தோ அல்லது கூட்டாகவே ஒன்றுகூட முடியும். அதனை மட்டுப்படுத்துவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை.

ஆகவே, பொருத்தமற்ற சட்ட ஏற்பாட்டின் ஊடாக நினைவேந்தலை தடுக்க முடியாது என்று நாம் வாதிட்டதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. அச்சமயத்தில் பொலிஸார் தடையுத்தரவைப் பெறுதற்காக மற்றுமொரு காரணத்தினை இணைத்துக்கொள்ள முனைந்தார்கள்.

குறிப்பாக, அமைக்கப்பட்டிருக்கின்ற கொட்டகைகள் இடிந்துவிழுந்து மக்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பொலிஸாரால் இந்த விடயம் அவர்களது மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய நாம், எமது வாதத்தில் நாம் தெரிவித்த உதாரணங்களை மனதிலிருத்தி திடீரென இத்தகைய ஒரு குற்றச்சாட்டை எழுப்புகின்றார்கள் என்பதையும் மன்றுக்குச் சுட்டிக்காட்டினோம். அமைக்கப்படாத கொட்டகைகள் தொடர்பில் பொலிஸார் எவ்வாறு தெரிந்து கொண்டார்கள் என்பது குறித்தும் நாம் கேள்வி எழுப்பினோம்.

இதனையடுத்து நீதிவான் குற்றவியல் தண்டனைக்கோவை 106இன் கீழ் பொலிஸார் முன்வைத்த மனுக்களை ஏற்று தடையுத்தரவுகளை பிறப்பிக்க முடியாதுஎன்று அவற்றைத் தள்ளுபடி செய்தார் -என்றார்.

**மன்னார்**

மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெறவிருந்த நினைவேந்தலுக்கு எதிராக தடை உத்தரவை பிறப்பிக்க கோரி அடம்பன் பொலிஸார் நகர்த்திய தடை உத்தரவு கோரும் மனுவிற்கு அனுமதி தர மன்னார் நீதிவான் மன்றம் நிராகரித்துள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ள உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தலுக்கு எதிராக தடை உத்தரவை பிறப்பிக்க கோரி அடம்பன் பொலிஸார் குற்றவியல் நடைமுறைக்கோவை 106 ஆம் பிரிவின் கீழ் தடை உத்தரவைக் கோரியிருந்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட 20 பேருடைய பெயர்கள் குறிப்பிட்டு 21ஆவது நபராக ஏனைய பொது மக்களென குறிப்பிடப்பட்டு குறித்த தடை உத்தரவை பொலிஸார் கோரினார்கள்.

இந்த மனு மீதான விசாரணை மன்னார் நீதிவான் மன்ற பதில் நீதவான் இ.கயஸ்பெல்டானோ முன்னிலையில் இடம்பெற்ற போது பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி எஸ்.டினேசன் உள்ளிட்டவர்கள் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவு குறித்து அவர் தெரிவித்தாவது,

பொலிஸாரன் மனுவை விசாரணைக்கு உட்படுத்திய நீதிவான் குறித்த நினைவேந்தலை அமைதியான முறையிலும், அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையிலும் நினைவுகூருவதற்கு அனுமதியளித்துள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இலச்சினைகள், மற்றும் கொடிகளை பயன்படுத்தாது, அமைதியான முறையில் நினைவுகூரமுடியும் என்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை முருங்கன் பொலிஸாரினால் 4 நபர்களுக்கு எதிராகவும், மடு பொலிஸார் 2 நபர்களுக்கு எதிராகவும் தடை உத்தரவு கோரியிருந்தபோதும் அக்கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு போரதீவுப்பற்றில் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அக்கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பங்கேற்றிருந்தார்.

நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு பிரசன்னமான பொலிஸார் நிகழ்வினை இடைநிறுத்தியதோடு அங்கிருந்து கலைந்து செல்லுமாறு முதலில் உத்தரவுகளை பறிப்பித்தார். எனினும், செல்வராஜா கஜேந்திரன் எம்.பி பொதுமக்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட பொருட்களை வழங்குவதில் என்ன தவறு உள்ளது. நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பினார்.

அச்சமயத்தில் அங்கு பிரசன்னமாகியிருந்த பொலிஸ் அதிகாரி அவருடைய அடையாள அட்டையைக் கோரியதோடு அதனை தொலைபேசி ஊடாக பிறிதொரு அதிகாரிக்கு தெரியப்படுத்திவிட்டு குறித்த அடையாள அட்டையை வழங்காது நின்றிருந்தார்.

அதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தமிழ் மக்களை ஏன் இவ்வாறு இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்துகின்றீர்கள். ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினரிடத்தில் அடையாள அட்டையைக் கோருவீர்களா. ஏன்று தர்க்கத்தில் ஈடுபட்டார். அதன்பின்னர் பதிலுக்கு பொலிஸ் அதிகாரியும் தான் கடமையையே செய்கிறார் என்று குறிப்பிட்டார். வாதப்பிரதிவாதங்கள் எழுந்த நிலையில் அங்கிருந்து பொலிஸார் இரு மணிநேரத்தின் பின்னர் வெளியேறினார்கள்.

இதேவேளை, மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்க முயன்ற ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என்.நகுலேஸ், மட்டக்களப்பு வெல்லாவெளிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுக்கு எதிராக, வெல்லாவெளிப் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைய, களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தால் தடையுத்தரவு வழங்கப்பட்டது.

வெல்லாவெளியில் உள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின், அலுவலகத்தில் காணப்பட்ட பதாகைகளையும் பொலிஸார் அகற்றியிருந்தனர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் அலுவலகத்தினை சூழ பெருமளவான பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் குவிக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்வுக்கு வந்தவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கையினையும் பொலிஸார் முன்னெடுத்தனர்.

அதேநேரம், மட்டக்களப்பு வாகரையிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவு கல்வெட்டுக்களையும் கம்பி வேலி அமைக்கப்போடப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்களையும் இனந்தெரியாதோர் அடித்து உடைத்ததுடன், சோடிக்கப்பட்ட கொடிகளை அறுத்து எறிந்துள்ள சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு நிகழ்ந்துள்ளது.

திருகோணமலை

திருகோணமலை ஆலங்குளத்தில் மாவீரர் நினைவேந்தலைச் செய்வதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மூதூர் நீதிவான் பிறப்பித்துள்ள தடையுத்தரவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 17 பேரின் பெயர்களும், பொதுமக்களும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு**

இம் முறையும் விடுதலை புலி உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் அணியின் உறுப்பினர்களாக இருப்பவர்களினால் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் விடுதலை புலிகளின் அமைப்பின், உயிரிழந்த உறுப்பினர்களை நினைவு கூற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு பிரிவு தகவல் வழங்கியுள்ளதாகவும், எனவே மாவீரர் நினைவேந்தல் என்ற தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலை புலி அமைப்பின் உறுப்பினர்களை நினைவேந்தும் நிகழ்வுக்கு ஏராளமானவர்களை ஒன்றிணைத்து அனுமதி பெறாத ஊர்வலம், பேரணி, கூட்டங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, தமக்கு தெரிய வந்ததாகவும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வினால் போர்க்கால நிலை மறந்து அமைதியாக வாழும் பொது மக்கள் மத்தியில் மீளவும் போரின் போக்கினை உருவாக்கும் எனவும். இனங்களுக்குக்கிடையே அமைதி குலைவு ஏற்படும் எனவும் கூறியிருந்தார்.

மாவீரர் நினைவேந்தல் என்ற சட்ட விரோத நிகழ்வினால் சட்டரீதியாக கடமை புரிபவர்களுக்கு தடைகள், பிரச்சினைகள், மற்றும் பாதிப்புகள் ஏற்படும் எனவும் மனித உயிர்கள், பொது சுகாதாரம் பாதிக்கப்படலாம் எனவும், தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் அமைதி இன்மை அல்லது முறுகல் ஏற்படும் என தெரிவித்து இதனை உடனே தடுப்பதற்கு அவசியம் எனவும் கீழ் பெயர் குறிப்பிடப்படுபவர்களுக்கு தடை கட்டளையினை வழங்குமாறு கோரியதன் அடிப்படையில் நீதிமன்றம் பின்வரும் கட்டளையை பிறப்பித்திருக்கின்றது.

கீழே பெயர் குறிப்பிடப்படும் நபர்களாகிய நீங்கள் 2023.11.24ஆம் திகதி இரவு 09.00 மணி தொடக்கம் 2023.11.27ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு மாவீரர் நினைவேந்தல் எனும் பெயரில் நினைவேந்தலை நடத்துவதற்கும், விடுதலை புலிகளின் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதனால் அதன் உறுப்பினர்களாக இருந்து உயிர் இழந்தவர்களை விடுதலை புலிகளின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நினைவு கூருவதற்க்கும், விடுதலை புலிகளின் சட்ட ரீதியற்ற குறிக்கோள்களுக்கு வலு சேர்க்கும் வகையில் விடுதலை புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கும், விடுதலை புலிகள் அமைப்பின் குறிக்கோள்களாக சொல்லப்படும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட குறிக்கோள்களுக்கு வலு சேர்க்கும் வகையில் விடுதலை புலிகளின் சின்னங்கள், புலி சீருடைகள், புலி சீருடையுடன் கூடிய படங்கள் புலிக் கொடிகள், வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்கள் மற்றும் விடுதலை புலிகள் தொடர்பான பாடல்கள் மற்றும் விடுதலை புலி உறுப்பினர்களாக வெளிபடுத்தும் பாடல்கள் சாதாரண சீருடை இல்லாத இராணுவ நடவடிக்கைகளுக்காக பன்படுத்தும் சீருடையுடனான படங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தி உயிர் இழந்த விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு அல்லது விடுதலைபுலிகள் அமைப்பின் தடை செய்யப்பட்ட குறிக்கோள்களுக்கு ஆதரவு அளிக்கும் அல்லது வலு சேர்க்கும் வகையில் பிரச்சாரங்கள் செய்வதற்கோ கூட்டங்கள் நடாத்துவதற்கோ, அல்லது உரையாற்றுவதற்கோ, ஊர்வலங்கள் பேரணிகள் நடாத்துவதற்கோ மற்றும் பொது அமைதிக்கும். பொது மக்களின் பொது போக்குவரத்திற்க்கும் இடையூறு ஏற்படும் வகையில் பேரணிகள், கூட்டங்கள் தொடர்பிலான சட்டங்களினை மீறும் வகையில் மேற் குறித்த அடிப்படையில் கூட்டங்கள். நினைவேந்தல், பேரணிகள் நடாத்துவதற்க்கும் தடை விதிக்கப்பட்டு குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106(3) ஆம் பிரிவின் கீழ் கட்டளையாக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாவீரர்கள் நினைவேந்தல் செய்வதைத் தடுத்து நிறுத்தல் மற்றும் மாவீரர்களின் விவரங்கள் பொறிக்கப்பட்ட காட்சிப்படுத்தல் ஆகியவற்றை அகற்றுதல் என்பவற்றுக்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று பிற்பகல் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நாளை திங்கட் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, வடமராட்சி ஆகிய பகுதிகளில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. வட்டுக்கோட்டையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா பங்கேற்றிருந்தார். வடமராட்சியில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் தமிழ் அரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.

## தொடரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மண்சரிவு ஏற்படுவதற்கான காரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவை தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் மண்சரிவு ஏற்படும் நிலைமையை தவிர்ப்பதற்கான அடுத்த வருடத்திற்கான வேலைத்திட்டத்திற்காக 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மண்சரிவினால் கடந்த இரண்டு மாதங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். இவற்றில் 5 உயிரிழப்புகள் இரத்தினபுரியில் பதிவாகியதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. ஏனையவை கண்டி, காலி, பதுளை மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.

இந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் மண்சரிவு அபாயம் நிலவும் 1559 இடங்களை தேசிய கட்டட ஆய்வு நிறுவகம ஆய்வு செய்;துள்ளது.

இந்த ஆய்வின்போது மண்சரிவு ஏற்பட்ட 131 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 768 மண்சரிவுகளும், 88 பாறைகள் வீழ்ந்த சம்பவங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிலம் தாழிறங்கல் உள்ளிட்ட ஏனைய 159 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

14 மாவட்டங்களில் 14,200 குடும்பங்கள் மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் சுமார் 5000 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் பயணிக்கும் கப்பல்களால் வருடாந்தம் 20 கோடி டொலர்களை வருமானம் ஈட்டமுடியும்

## பிரமித்த பண்டார தென்னகோன் தகவல்



இலங்கை கடற்பரப்பிற்கு அருகில் பயணிக்கும் கப்பல்கள் மூலம் நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 200 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டும் வகையில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்க தேசிய நீரியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

நாரா நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்போதுள்ள கடல்சார் வரைபடங்கள் பிரித்தானிய நீரியல் அலுவலகத்தால் செயற்படுத்தப்படுவதாகவும், எனவே எதிர்காலத்தில் இலத்திரனியல் கடல்சார் விளக்கப்படங்களை உருவாக்கும் பொறுப்பை கடற்படையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் -

நாடு பல சவால்களை எதிர்கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எனக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கினார். இந்த நாட்டில் தேசிய பாதுகாப்பும் சட்டத்தின் ஆட்சியும் சீர்குலைந்துபோனது. நாட்டுமக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக வரிசையில் நின்று சோர்வடைந்தனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான தலைமையின் கீழ் நாட்டின் நிலைமை அன்றைய நிலையை விட சிறந்த நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சரியான முடிவுகளால் நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுப்பெற்றுள்ளது.

நாட்டில் யுத்தம் இல்லை என்று கூறி தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதை நிறுத்த முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடந்தபோது ஒரு தேசமாக நாம் அந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டோம். ஒரு நாட்டின் இராணுவம் முழுமையாக அந்நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியுள்ளது. இனம், மதம், சாதி வேறுபாடின்றி ஒவ்வொரு பிரஜையினதும் பாதுகாப்பையும் உறுதி செய்ய இராணுவம் கடமைப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. உலகில் எந்த ஒரு நாடும் தனது நாட்டின் பாதுகாப்பிற்காக அதிக நிதியை ஒதுக்குகிறது. ஆனால் சில அரசியல்வாதிகள் எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை அதிகம் என்று கூறி நாட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்காக 423 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தளவு பாரிய தொகை முழுமையாக இராணுவத்திற்காகவே செலவிடப்படுவதாக சாதாரண மக்கள் நினைக்கின்றார்கள். இது ஒரு தவறான கருத்தாகும். இந்தக் கருத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருபத்தி மூன்று நிறுவனங்கள் உள்ளன. இவ்வாறு ஒதுக்கப்பட்டதில் 169 பில்லியன் ரூபா மாத்திரமே ஆயுதப்படைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து நிதிகளும், உதாரணமாக அனர்த்த முகாமைத்துவம், வானிலை போன்ற பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், தற்போது நாம் ஆயுதப்படைகளின் சரியான அளவு தொடர்பான விடயத்தை ஆரம்பித்துள்ளோம். 2030ஆம் ஆண்டுக்குள் 208,000 அங்கீகரிக்கப்பட்ட இராணுவப் படையினரின் எண்ணிக்கையை 100,000 ஆகக் குறைக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவற்றை சரியான பொறிமுறையின்றி நடைமுறைப்படுத்த முடியாது.

இயற்கையான குறைவு, மனித வளத்திற்குப் பதிலாக தொழில்நுட்பத்தை புகுத்தல், இராணுவ மதிப்புகள் நெறிமுறைகளைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு காரணிகளைக் கருத்தில் கொண்டு இந்த செயல்முறை அறிவியல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. அரச பொறிமுறையை செயற்திறன்மிக்க வகையில் மறுசீரமைப்புச் செய்யும் பணிக்காக ஆயுதப்படை மூலம் நாட்டுக்கு நாம் வழங்கிய மிகச் சிறந்த உதாரணம் இதுவாகும்.

வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, தேசிய மாணவர் படை மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் போன்று கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளன. அப்படியானால் இந்த அமைச்சின் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நேரடியாக பிள்ளைகளின் கல்விக்காக பெருமளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுதவிர, இயற்கை அனர்த்தங்களால் பயிர் நிலங்கள் மற்றும் பொதுமக்களின் சொத்துக்கள் அழிக்கப்படும் போது, பாதுகாப்பு அமைச்சின் மூலமே அவற்றுக்கான இழப்பீடுகளும் வழங்கப்படுகின்றன என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

அதேபோன்று, பாதுகாப்பு அமைச்சின் மூலம் இந்நாடு பெற்றுக்கொள்ளும் வருமானத்தையும், அது தவிர்க்கும் பொருளாதார மற்றும் சமூக செலவுகளையும் பலர் புரிந்து கொள்வதில்லை. ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைக்கு எமது படைவீரர்களை அனுப்புவதன் மூலம் இந்நாடு பெரும் தொகையைப் பெறுகிறது.

ஜனாதிபதி இதனை விரிவுபடுத்துவதற்கு ஏற்கனவே பல்வேறு பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார். கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சுமார் 250 வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதிலிருந்து நாட்டுக்கு வருமானம் கிடைப்பதோடு, உள்நாட்டு மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்வதைக் குறைப்பதால், நாட்டில் அதிக அளவு அந்நியச் செலாவணி சேமிக்கப்படுகிறது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்தால்தான் இலங்கைக்கு வருமானம் கிடைக்கும் என பலர் நினைக்கின்றனர். நம் நாட்டுக்கு அருகில் பயணம் செய்தாலும், எமக்கு வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகள் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் நாற்பத்தைந்து கப்பல்கள் வரை நம் நாட்டின் கடல் எல்லை வழியாக பயணம் செய்கின்றன. இவற்றின் மூலம் வருமானம் பெற, நாம் மின்னணுப் பயண விளக்கப்படங்களை உருவாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை ஏற்று அந்தப் பணியைச் செய்ய நமது கடற்படை தயாராக உள்ளது. அதன் மூலம் அதிக வருமானம் பெறலாம். இதன் மூலம் நேரடி வருமானமாக சுமார் 200 மில்லியன் டொலர்கள் வரை கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மறைமுக வருமானம் இன்னும் அதிகமாகும்.

தற்போது நமது வளிமண்டலவியல் திணைக்களம் மிகவும் குறைந்த தரத்தில் உள்ளது. ஏனைய நாடுகளில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெறப்பட்ட மிகச்சரியான கணிப்புகள் மூலம் அவர்கள் அதிக வருமானத்தைப் பெறுகிறார்கள். எனவே, 2024ஆம் ஆண்டு உலக வங்கியின் கடன் உதவியின் இந்தத் துறையை நவீனமயப்படுத்த அவசியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் கூற வேண்டும்.

இந்த வகையில், மேம்பட்ட தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தல் மற்றும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல், துல்லியமான முன்னறிவிப்பு மூலம் வானிலை முன்னறிவிப்புகளைப் பயன்படுத்தக் கூடிய விவசாயம், மீன்பிடி, நீர் முகாமைத்துவம், வலுசக்தி, சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து போன்ற அனைத்துத் துறைகளிலும் மிக உயர்ந்த செயற்பாட்டுக்கு பங்களிக்க முடியும். இதன் ஒரு கட்டமாக புத்தளத்தில் ஜசிக்கா உதவியின் கீழ் டொப்ளர் ரேடார் கட்டமைப்பும் நிறுவப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமே மண்சரிவு தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகின்றது. கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பான கட்டடக் குறியீட்டை நாம் சட்டமாக்கவில்லை என்றால், எதிர்காலத்தில் அதிகமாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்களால் பாரிய சிக்கல்கள் தேன்றலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. எனவே 2024 ஆம் ஆண்டு கட்டடக் குறியீட்டுப் பணியை விரைவாக நிறைவு செய்யும் பொறுப்பை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நாம் வழங்கியுள்ளோம். அதற்கேற்ப எதிர்காலத்தில் கட்டடங்களை நிர்மாணிப்பது குறித்து தரநிலை மற்றும் பொறுப்புணர்வையும் உருவாக்க முடியும்.

இதேபோன்று, மரங்கள் தொடர்பான பாதுகாப்பு அறிவிப்பு மற்றும் அபாய எச்சரிக்கைகளை வெளியிட எந்த ஒரு நிறுவனமும் இல்லை. தற்போது அந்தப் பொறுப்பை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நாம் வழங்கியுள்ளோம். இதற்கென தனியான பிரிவு உருவாக்கப்பட்டு பிரதேச செயலகப் பிரிவுகள், பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இணைந்து இப்பணியை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தேசிய மாணவர் படையணியில் இணைய வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்கள் தயங்குவது குறித்தும் நாம் எமது அவதானத்தை செலுத்தியுளாளம். அவர்களையும் மாணவர் படையணியில் இணைத்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை மெற்கொண்டு வருகின்றோம். ஜனாதிபதி தேசிய மாணவர் படையணியின் மேம்பாட்டுக்காகவும் நிதி ஒதுக்கியுள்ளார். இந்த செயற்பாட்டின் மூலம், சிறந்த ஆளுமை மற்றும் நல்ல தலைமைத்துவம் கொண்ட, நடைமுறை ரீதியான பிள்ளைகளை உருவாக்க முடியும்.

அதன்படி, புலனாய்வுத் துறையுடன் இணைந்து தேசிய மாணவர் படையின் புதிய சமூக புலனாய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஒருபுறம், பாடசாலைகளில் நடக்கும் தவறான செயல்கள், சிறுவர் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருள் பாவனை ஆகியவற்றிலிருந்து நமது இளைஞர்களையும் மாணவர்களையும் பாதுகாக்க இந்தத் திட்டம் உதவும் என்று நான் நம்புகிறேன். - என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேலும் தெரிவித்தார். (05)

# திருகோணமலையில் எரிபொருள்சார் அபிவிருத்திகளை முன்னெடுக்க இந்தியாவிடம் அனுமதி பெறவேண்டுமா?

## கபீர் ஹாசிம் மன்றில் கேள்வி



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரசிங்கவுக்கு அறிவு இருப்பதால் அவர் 2002 ஆம் ஆண்டு திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கினார்.

ஆனால் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியில் எவ்விதமான நிபந்தனைகளுமில்லாமல் எண்ணெய் தாங்கிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திருகோணமலை மாவட்டத்தில் ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமாயின் அதற்கு இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் மின்சாரத்துறை மற்றும் எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

அம்பாந்தோட்டை துறைமுக பகுதியில் உள்ள எண்ணெய் தாங்கிகளின் 85 சதவீதத்தை சீனாவுக்கும், மிகுதி 15 சதவீதத்தை துறைமுக அதிகார சபைக்கும் பொறுப்பாக்கும் வகையில் கடந்தகாலத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதற்கமைய 15 சதவீத வருமானம் டொலர் அலகில் துறைமுக அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றது. இந்த முறைமையை மாற்றியமைக்க சீன நிறுவனம் நல்லாட்சி அரசாங்கத்தில் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் அம்பாந்தோட்டை எண்ணெய் தாங்கிகளின் உரிமத்தை சீனாவின் சைனோபாம் நிறுவனத்துக்கு முழுமையாக வழங்கினார்.

இதனால் துறைமுக அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற 15 சதவீத வருமானம் இழக்கப்பட்டுள்ளது. தமது வருமானம் இழக்கப்படும் வரை துறைமுக அதிகார சபை என்ன செய்துகொண்டிருந்தது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிறைவடைந்த 09 மாத காலப்பகுதியில் மாத்திரம் 106 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது.

தேசிய மட்டத்தில் எரிபொருள் விநியோகத்துக்கு சர்வதேச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனம், சீனாவின் சினோபாம் நிறுவனம் மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கின்றன.

இந்த மூன்று நிறுவனங்களும் வருடாந்தம் 5000 கோடி ரூபா இலாபமடையும் என்ற நிலையில் இலங்கைக்கு 200 கோடி ரூபா கிடைக்கப் பெறும் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த நிறுவனங்கள் குறைந்தளவிலான டொலரை செலவழித்து அதிகளவான டொலரை நாட்டில் இருந்து கொண்டு செல்கிறது. ஆகவே இந்த நிறுவனங்களில் இலாபம் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அறிவுபூர்வமாக ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கினார்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தின் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ச 500 மில்லியன் டொலருக்காக 96 எண்ணெய் தாங்கிகளை எவ்வித நிபந்தனைளுமில்லாமல் இந்தியாவுக்கு வழங்கினார்.

96 எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் திருகோணமலை மாவட்டத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஏதேனும் அபிவிருத்திகளை முன்னெடுப்பதாக இருந்தால் அதற்கு இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா? அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தால் அது பாரதூரமானது. இதற்கு மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் பதிலளிக்க வேண்டும். - என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த அமைச்சர் கஞ்சன விஜேசேகர -

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதை நாங்கள் அண்மையில் தான் அறிந்தோம். அதனை திருத்தம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புவிசார் அரசியலின் கடும் சூட்டை உணரத் தொடங்குகிறதா தெற்கு?

அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்தியா மற்றும் சீனா இடையிலான புவிசார் அரசியல் போட்டிக்கு நடுவில் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது என்று அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இந்த விடயத்தைப் பொதுவெளியில் இப்படிப் பகிரங்கமாக அவர் போட்டுடைப்பது இதுதான் முதல் தடவை.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா சென்றிருந்தபோது அங்குள்ள ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில் சீனாவையும் இந்தியாவையும் கையாள்வது தமக்குப் பழக்கமாகிவிட்டதாகத் தெரிவித்திருந்தார். ஒரு மாதம் கடப்பதற்குள் இரு நாடுகளினதும் புவிசார் அரசியல் நலனுக்குள் இலங்கை சிக்கிக்கொண்டுள்ளார் என்று கோபப்பட்டுள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டபோது அதிலிருந்து வெளியேற இந்திய உதவி உதவினாலும், சமீபத்தில் சீனாவுடன் இலங்கை காட்டும் நெருக்கத்தை இந்தியாவால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. உதாரணமாக, இந்த ஆண்டு ஐப்பசி மாதம் சீன ஆராய்ச்சிக் கப்பல் ஷியான் 6 கொழும்பை வந்தடைந்தது இந்தியா எழுப்பிய எதிர்ப்பைக் குறிப்பிடலாம். இந்தியாவும் அதன் நெருங்கிய கூட்டாளிகளில் ஒன்றான அமெரிக்காவும், சீனாவின் உளவுக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறிக் கவலைகளை எழுப்பியது.

ஆயினும்கூட, கடன்பட்ட நிலையில் இருந்து விடுபட இலங்கை சீனாவின் பெல்ட் ரோடு முன்முயற்சியின் (BRI) ஒரு பகுதியாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலும் இருக்கின்றது, இது புதிய சந்தைகளைத் திறக்கிறது மற்றும் இலங்கை உலகளாவிய உற்பத்தி சங்கிலியின் ஒரு பகுதியாக இலங்கை மாற உதவுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய நடவடிக்கையை இந்தியாவுக்கு எதிரானது என்று இந்தியா கருதுகிறது.

எவ்வாறாயினும், உண்மை என்னவென்றால், அனைத்து பெரிய இராணுவசக்திகளும் தங்கள் போட்டியாளர்களாக அல்லது எதிரிகளாகக் காணக்கூடிய நாடுகளை மையமாகக் கொண்ட செயற்கைக்கோள்களின் வரிசையைப் பராமரிக்கின்றன. ரஷ்யாவை உள்ளடக்கிய செயற்கைக்கோள்களின் வரிசையை அமெரிக்கா கொண்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான உளவு செயற்கைக் கோள்களை சீனா வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

கூகுள் போன்ற செயற்கை நுண்ணறிவு (AI) தேடுபொறிகள் கூட செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. கூகுள் மேப்ஸின் காட்சிகள் சீனாவின் கடலுக்கடியில் உள்ள நீர்மூழ்கிக் கப்பல்களை அதன் அணுசக்தி துணைக் கப்பல்களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. கூகுளால் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களை வெளிக்கொணர முடியுமென்றால், அதைவிட அதிநவீன செயற்கைக்கோள்கள் மற்றும் கண்காணிப்பு சாதனங்களைக் கொண்டுள்ள சீனா, இந்தியா ஏற்படுத்தியிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சரிபார்க்க, கொழும்பு திருகோணமலை அல்லது அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு ஆராய்ச்சிக் கப்பலை அனுப்பித்தான் உளவு பார்க்கவேண்டும் என்பதில்லை.

இந்த நிலைமையை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையை விமர்சித்து இந்தியா கருத்துத் தெரிவித்துள்ளது. இதுதான் அரசுத் தலைவரைக் கோபப்படுத்தியுள்ளது. சீன விவகாரத்தால்தான் இந்தியா இத்தகைய நிலைப்பாட்டை எடுத்தது என்று அவர் கருதுகின்றார்.

அதற்குக்காரணம் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் பாலஸ்தீன நிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் மீது பாலஸ்தீன அமைப்பு ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசாவில் பல ஆயிரக்கணக்கில் பாலஸ்தீனியர்களை கொன்று குவித்து வரும் நிலையில், இந்தியா இன்று இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளது. ஒரு மில்லியன் பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா ஏன் இந்த இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது என்றால், அதன் புவிசார் அரசியல் நலன்கள் கருதிய செயற்பாடு அது என்றே இலங்கை கருதுகின்றது. இருந்தாலும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது என்பதே உண்மை.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பூகோள அரசியல் அதிகாரப் போட்டியில் இலங்கை போர்க்களமாக மாறுவது போல் இப்போதுதான் சிங்களத் தலைவர்களுக்குத் தோற்றமளிக்கத் தொடங்கியுள்ளது. அந்த அறச்சீற்றத்தைத்தான் அரசுத் தலைவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் இதுபோன்ற அவரது கோபத்தால் எந்தப் பயனும் கிட்டாது. இலங்கையின் சீனாவின் இருப்புப் பற்றிய இந்தியாவின் பயத்தை இலங்கை தணிக்கவில்லை என்றால் நிலமை இன்னும் மோசமாகும். எப்போதும் பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் உத்தி பயனளிக்காது.

# மாற்றம் மட்டுமே மாறாதது

**இன்சுவை**



கடந்த 50 ஆண்டுகளில் மக்களின் வாழ்க்கையில் எத்தனை எத்தனை மாற்றங்கள்! ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும், சிலரின் வாழ்க்கையைப் பாதித்து, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறி ஆக்கியது. அவர்கள் செய்து வந்த தொழில்கள் இல்லாமல் போய் விட்டன. பலர் தற்போது வேறு தொழிலுக்கு மாறி இருக்கக்கூடும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, தொலைபேசி இணைப்பு வேண்டுமென்றால் அதற்காக விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்க வேண்டும். யாரிடமாவது பேச வேண்டுமென்றால், தொலைபேசி மையத்துக்குச் சென்று பேச வேண்டும். வரிசையில் காத்து நின்று, காசு பார்த்துப் பேசுவார்கள். எனவே, நிறைய பேச முடியாது.

இந்த நிலையில், ஒருவர் வீட்டுக்குத் தொலைபேசி இணைப்பு கிடைத்து விட்டால், அதுவே ஒரு கொண்டாட்டமாக இருக்கும். சமூக மதிப்பாகவும்கூட இருந்தது. முதல் அழைப்பு மணி ஓசை சங்கீதமாக இருக்கும். 'யார் போய் எடுப்பது?' என்பதில் பிள்ளைகளிடையே போட்டி வந்துவிடும். உடனே அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு தொலைபேசி எண்ணைத் தந்துவிடுவார்கள். அவர்களை அழைக்கக் கூறி, அவர்களின் நட்பும், உறவும் அழைக்கும். ஒலி வாங்கியை அப்படியே வைத்துவிட்டு அவர்களை அழைக்கக் குழந்தைகளை அனுப்புவார்கள். குழந்தைகள் கொஞ்சம் பெருமிதத்துடன் ஓடிப் போய் கூப்பிடுவார்கள்.

தொடக்கத்தில் எல்லாம் நன்றாகத்தான் போகும். பின்னர் சலிப்பும் கோபமும் வந்து விடும். இந்தத் தொல்லை தொடரும்போது தலைவலியாகத் தோன்றும். ரூபாய் நாணயங்கள் போட்டுவிட்டு பேசக் கூடிய தொலைபேசியை வைத்துக் கொண்டு பலரும் பிழைத்தனர். பெரும்பாலான மக்கள் அப்படித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். 'கொமி-னிகேசன்' அப்போது தனி வியாபாரமாகவே இருந்தது.

அதற்குப் பின்னர் தொலைபேசி இணைப்பு கிடைப்பது எளிதானது; நடுத்தர குடும்பங்களும் தொலைபேசி வைத்துக்கொள்ள, பொதுத் தொலைபேசியின் பயன்பாடு குறையத் தொடங்கியது. அடுத்து கைப்பேசி வந்ததும், நாணயம் போட்டுப் பேசும் தொலைபேசியும், தொலைப்பேசி மையமும் தொலைந்தன.

ஒரு காலத்தில் நம் அன்பையும், நேசத்தையும் தெரிவிக்க வாழ்த்து அட்டைகள் ஒரு பாலமாக இருந்தன. பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், தமிழ் - ஆங்கிலப் புத்தாண்டு, பிறந்தநாள் - திருமண நாள் என எல்லாவற்றுக்கும் வாழ்த்து அட்டைகளின் விற்பனை சிறப்பாக இருக்கும்.

பண்டிகைக்கு முன்பே அட்டைகளைத் தேர்வு செய்ய ஆரம்பித்து விடுவார்கள். விலையைப் பார்த்து வாங்குவார்கள்; வாசகங்களைப் பார்த்து வாங்குவார்கள். தீபாவளி என்றால் விளக்குகள், மத்தாப்புகள், கடவுள் படங்கள் இருக்கும். பொங்கல் அட்டையில் மாடு, பொங்கல் பானை, கரும்பு, மஞ்சள் கொத்து, உழவர் படம் இருக்கும். குழந்தைகள், தலைவர்கள், நடிகர்கள் படங்களும் இருக்கும்.

அவரவர் ரசனைக்கேற்ற அட்டைகளை வாங்கி வந்து, உறையில் போட்டு முகவரி எழுதி, தபால் தலை ஒட்டி அஞ்சல் பெட்டியில் போடும் வரை உற்சாகமாக இருக்கும். தங்களுக்கு வரும் வாழ்த்து அட்டைகளைப் பலரும் தூக்கிப் போடாமல் சேர்த்து வைப்பது வழக்கம். காதலர்களின் தூது இந்த அட்டைகளே.

தற்போது வாழ்த்து அட்டைகளும் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. கைப்பேசியில் வாழ்த்துச் செய்தி அனுப்புவது எளிதானதாகவும், செலவில்லாததாகவும் ஆகிவிட்டது.

மேலை நாடுகளில் இன்னமும் வாழ்த்து அட்டைகளை அனுப்பும் வழக்கம் தொடர்கிறது. இங்கே குறைந்து போனதால், இந்த அட்டைகளை அச்சடிப்போர், விற்பனை செய்வோர் எனப் பலருக்கும் மாற்று வழி தேட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

முன்பு அரைவை இயந்திரம் இல்லாத காலத்தில் வீடுகளில் அம்மியும், உரலும் மட்டுமே இருந்தன. இட்லிக்கு மாவு அரைக்க வேண்டுமென்றால் இரண்டு பெண்கள் கதை பேசிக் கொண்டே, ஒருவர் ஆட்ட அடுத்தவர் அரிசியைத் தள்ளிவிட எளிதாக ஆட்டி விடுவார்கள். கல்லில் 'பொழி' மழுங்கிப் போய் விட்டால் மாவு சரியாக அரைபடாது. ஆகவே, அடிக்கடி கல்லுக்கு 'பொழி'ய வேண்டும். தெருவில் ''அம்மி, ஆட்டுக்கல் பொழி போடணுமா'' என்று கூவிக் கொண்டு ஆட்கள் வருவார்கள். அவர்களை அழைத்தால், சிறப்பாக 'பொழி'ந்து கொடுப்பார்கள். அந்தத் தொழிலும் இப்போது வருவாய் ஈட்டித் தருவதில்லை.

ஒரு காலத்தில் பெரும்பாலானோர் மிதி வண்டி மட்டுமே வைத் திருப்பார்கள். அதற்கு காற்றடிக்க வேண்டும். அதற்கு 'பம்ப்' வேண்டும். ''இங்கு சைக்கிளுக்குக் காற்றடிக்கப்படும்'' என்று அறிவிப்புப் பலகை வைத்துவிட்டு பிழைப்பு நடத்தியவர்கள் பலர். அதேபோல சைக்கிளை வாடகைக்கு விட்டும் வருவாய் ஈட்டியிருக்கின்றனர். அந்தத் தொழிலிலேயே குடும்பம் நடத்தப் போதுமான வருமானம் கிட்டியது. அவர்கள் இப்போது வேறு தொழிலுக்கு மாறி இருப்பார்களா?

வானொலிப் பெட்டி வந்த பின் அதைக் கையோடு தூக்கிக் கொண்டு பலர் அலைந்தனர். அதன் பின் ஒலிப் பேழைகள் வந்தன. அதற்கும் முன்பு கிராமபோன் (இசைத் தட்டுப் பெட்டி) இருந்தது. இசைத் தட்டுகள் வாங்குவார்கள். அதை வரவேற்பறையில் வைப்பது பெருமை சேர்த்தது. ஒலிப் பேழைகளில் (கசட்) திரை இசைப் பாடல்களை பதிவுசெய்யும் ஆர்வம் கூடியது.

ஒலிப் பேழையின் இரு புறமும் பாடல்களைப் பதிவு செய்யலாம்; அவற்றைச் சேகரிப்பது பலரின் பொழுதுபோக்காக இருந்தது. விசிடி, விசிபி என்று விடியோ டெக்குகள் வந்த பின் விடியோ கேசட் வாங்கி வந்து வீட்டிலேயே படம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அதனால் புற்றீசல்கள் போல ஆடியோ, விடியோ கேசட் கடைகள் பெருகின. ஊர்த் திருவிழா என்றால் டெக் மற்றும் விடியோ கேசட்டை வாடகைக்கு வாங்கி வந்து படம் போடுவதை வழக்கமாகக் கொண்டனர். பின் சி.டி. ப்ளேயர் (குறு வட்டு) வந்தது. அதை வீழ்த்த டிவிடி (டிஜிட்டல் விடியோ வட்டு) வந்தது. 'கேசட்' கடை வைத்துப் பிழைப்பு நடத்தியவர்கள் தொழிலை மாற்றினர்.

இதேபோன்று கைப்பேசியின் பல பரிமாணங்கள் வியப்பை ஏற்படுத்துகின்றன. அறிதிறன் பேசிகள் பயன்பாட்டுக்கு வந்த பின்னர் காணாமல் போனவை அதிகம். முன்பு நம்மை எழுப்ப அலாரம் கடிகாரம் தேவைப்பட்டது. இப்போது கைப்பேசியில் அலாரம் வைத்துக் கொள்கிறோம். முன்பு எல்லோரிடமும் புகைப்படக் கருவி இருக்கும். எங்கே வெளியே சென்றாலும் கேமராவோடுதான் போவோம். அதற்கென புகைப்படச் சுருள் வாங்க வேண்டும். படம் எடுத்த பின் கொடுத்து பிரிண்ட் போட்டு, ஓர் ஆல்பம் வாங்கி அதில் புகைப்படங்களை ஒட்டுவோம். தற்போது எண்ணிலடங்கா புகைப்படங்களைக் கைப்பேசியில் எடுத்துக் கொள்ளலாம். விசே நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே புகைப்படக் கலைஞர்களை அழைக்கிறோம்.

அடுத்து கைப்பேசியிலேயே கால்குலேட்டர் இருப்பதால், தனியாக கால்குலேட்டர் வாங்கத் தேவையில்லை. ஒவ்வொரு வீட்டிலும் தமிழ் மற்றும் ஆங்கில அகராதிகள் இருக்கும். கடினமான சொற்களுக்குப் பொருள் தேட அகராதிகள் அவசியம். தற்போது நம் கைப்பேசியில் அகராதியைப் பதிவிறக்கம் செய்து கொள்கிறோம். அகராதி விற்பனை குறைந்து விட்டது. கைப்பேசியிலேயே டார்ச்லைட் வசதி இருப்பதால் தனியாக டார்ச் லைட் வாங்கத் தேவையில்லை.

வாட்ச் ரிப்பேர் கடைகள், ரேடியோ ரிப்பேர் கடைகள் எல்லாம் குறைந்து விட்டன. குடும்ப மருத்துவர், குடும்ப நகை செய்பவர் என்பது இன்று இல்லை. நிறைய உழவு மாடுகளும், வண்டி மாடுகளும் இருந்த காலத்தில் அம்மாடுகளுக்கு 'லாடம்' அடிக்க ஆட்கள் இருந்தார்கள். மாடுகளை படுக்க வைத்து, அவற்றின் கால்களைக் கட்டி லாடம் அடிப்பதைப் பார்க்கும்போது நமக்குப் பாவமாக இருக்கும். இப்போதெல்லாம் அந்தக் காட்சியைப் பார்க்க முடிவதில்லை. புதிய புதிய தொழில்நுட்பங்கள் கண்டு பிடிக்கப்படும் போது பழைய முறைகள் மறைந்துதான் போகும். மாற்றம் எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அந்த மாற்றத்திற்கேற்ப மக்களின் வாழ்க்கை முறையும் மாறிக் கொண்டே இருக்கிறது. புதிய உத்திகளைக் கையாளும் போது சிலருக்குப் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும். சில தொழில்கள் நசித்துப் போய்த்தான் தீரும். அவர்களும் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். உடைந்து போய் விடக் கூடாது.

நம் நாட்டைப் பொருத்தவரை மனித சக்தியை இயந்திர சக்தி அழித்து விடாது. பிழைப்பதற்கான வழிகள் ஏராளமாக உள்ளன. கையில் நோமையும், வாயில் மெய்யும் இருந்தால் கண்டிப்பாக வறுமை வாட்டாது. ஆகவே, ஒரு தொழில் நசித்துப் போய் விட்டால், மாற்றுத் தொழில் செய்ய முன்வர வேண்டும். வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. உழைக்க மனம் இருந்தால் போதும். எதுவும் நிரந்தரம் இல்லாத இந்த உலகில் மாற்றங்கள் மட்டுமே மாறாத ஒன்று.

# நாட்டின் நீர்வளத்தை விற்க அங்கீகாரம் வழங்கவில்லை

## மஹிந்த அமரவீர பகிரங்க அறிவிப்பு



நாட்டின் நீர்வளத்தை பிற நாட்டுக்கு விற்பனை செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகக் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது.

நீர்வளத்தை விற்ப தற்கு பேச்சுகள் கூட முன்னெடுக் கப்படவில்லை. நாட்டின் நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு உரியநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவே தவிர விற்பனை செய்வதற்கல்ல என விவசாயத்துறைமற்றும்பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு செலவுத் தி ட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

மின்விநியோக கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த சூழ்நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றது.உக்ரைன்- ரஷ்யாவுக்கு இடையிலான மோதல் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மின்விநியோகத்துக்கான கேள்வி உயர்வடைந்தது. தற்போது இஸ்ரேல்- பலஸ்தீனத்துக்கு இடையிலான மோதலால் மின்விநியோக கட்டமைப்பு மீண்டும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

தடையின்றி மின்விநியோகம் மற்றும் எரிபொருள் சேவையை முன்னெடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. டொலர் பற்றாக்குறையால் நாட்டின் கடற்பரப்பில் எரிபொருள் கப்பல் நங்கூரமிட்டு இருந்ததை மறக்கக் கூடாது. தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணம் உயர்வடைந்துள்ளதால் மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். விலை உயர்வை மாத்திரம் சுட்டிக்காட்டி பேசும் தரப்பினர் விலையைக் குறைக்கும் போது அதனைக் சுட்டிக் காட்டுவதில்லை. உலக சந்தையில்எரிபொருள்விலைகுறைவடையும் போது அதன் பயன் நாட்டு மக்களுக்கு நிச்சயம் வழங்கப்படும்.

தற்போது அதிக மழைவீழ்ச்சி கிடைப்பதால் நீர் மின்னுற்பத்தி வீதத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல்வரையானகாலப்பகுதிகளில்வறட்சியான காலநிலைநிலவும்எனகாலநிலைஅவதானிப்பு மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.ஆகவே கிடைக்கப்பெறும் மழை வீழ்ச்சியை முழுமையாகநீர்மின்னுற்பத்திக்குமாத்திரம்பயன்படுத்த முடியாது. சமநிலைப்படுத்தலுடன் முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதுப்பிக்கத்தக்க சக்தி வள பயன்பாட்டை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.மின்கட்டணம் உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்பினர் வெளிநாட்டு நிறுவனங்களுடன் கடந்த காலங்களில் முன்னெடுத்த முதலீட்டு தி ட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். இதனால்தான் புதிய மின்னுற்பத்தி திட்டங்கள் தோல்வியடைந்தன. நாட்டின் நீர்வளத்தை பிற நாட்டுக்கு விற்பனை செய்ய அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியதாகக்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் முற்றிலும் பொய்யானது.அதற்கான பேச்சுகள் கூட முன்னெடுக்கப்படவில்லை. நாட்டின் நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதே தவிர விற்பதற்கு உரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை. - என்றார். (05)

# மட்டக்களப்பில் பாம்பு தீண்டி 6 மாத குழந்தை பரிதாபச் சாவு

ஆறு மாத குழந்தை ஒன்றை விசப்பாம்பு தீண்டியதால் பரிதாபகரமான முறையில் பலியான சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒல்லிக்குளம் பற்றிமாபுரத்தில் இடம்பெற்றது.

பாத்திமா புரத்தில் உள்ள தனது வீட்டில் வெற்றுத்தரையில் தூங்கிக்கொண்டிருந்த ஆறு மாத குழந்தையை பாம்பு பல இடங்களில் தீண்டியுள்ளதால் மரணம் ஏற்பட்டிருப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரியின் பிரேத பரிசோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாயின் அருகே தூங்கிக் கொண்டிருந்த தனது குழந்தையை அதிகாலை 3.30 மணி அளவில் பாம்பு தீண்டி இருக்கிறது. தாய் காலை 7 மணி அளவில் மயக்க நிலையில் இருந்த குழந்தையை ஆரையம்பதி வைத்தியசாலையில் சேர்த்தார் .

குறித்த குழந்தை உயிரிழந்த நிலையிலேயே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனையின் பின்னர் குழந்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்னேஷ் அபிலாஷ் என்னும் 6 மாத ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளது .

வீட்டின் அருகில் இருந்த காடுகளுக்குள் இருந்தே மேற்படி பாம்பு வீட்டினுள் நுழைந்து குழந்தையை தீண்டியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையை தீண்டிய பாம்பை அயலவர்கள் அடித்துக்கொன்றுள்ளதுடன் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# 100 ரூபா பணம் தருவதாககூறி 11 வயது சிறுமியை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம்; முதியவர் கைது

களுத்துறை இங்கிரிய பிரதேசத்தில் 100 ரூபா தருவதாகக் கூறி 11 வயது சிறுமியை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் இங்கிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் அம்பாறை பிரதேசத்தை சேர்ந்த 67 வயதுடையவராவார்.

இவர் பாதிக்கப்பட்ட சிறுமியின் வீட்டிற்கு அண்மையில் உள்ள அவரது பெற்றோரின் வீட்டில் தற்காலிகமாக தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் 100 ரூபா தருவதாகக் கூறி வீட்டிற்கு வெளியே அழைத்து சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி பணத்தை வாங்க மறுத்தார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



பாதிக்கப்பட்ட சிறுமி பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இங்கிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chinise Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 5 லட்சத்துக்கும் அதிக பாவனையாளர் மின்கட்டண அதிகரிப்பால் மின்துண்டிப்பு

## ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு



மின் கட்டண அதிகரிப்பால் 5 லட்சம் பேரின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. 30 அலகுக்கும் குறைவான மின் பாவனையைக் கொண்டிருந்த ஏழை மக்களின்மின்இணைப்புக்களே துண்டிக்கப்பட்டுள்ளன என மக்கள் விடுதலை முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

எரிபொருள், மின்சாரம் ஆகிய துறைகள் மக் களின் அன்றாட செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புப்பட்டுள்ளது. ஆகவே இவ்விருதுறைகளும் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மின்கட்டண அதிகரிப்பே மின்விநியோகநெருக்கடிக்கு தீர்வு என்று அரசாங்கம் குறிப்பிட்டு பலமுறை மின்கட்டணத்தை அதிகரித்துள்ளது.

மின்கட்டண அதிகரிப்பால் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான மின்பாவனைய-ாளர்களுக்கானமின்பாவனை துண்டிக்கப்பட்டுள்ளது. 30 அலகுக்கும் குறைவான மின்னலகை பாவிக்கும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கான மின்பாவனையே இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பால்ஒட்டுமொத்தமக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 2 லட்சத்துக்கும் அதிகமான மின்பாவனையாளர்கள் தமது மின்பாவனையை 30 மின்னலகுக்குள்ளும், உயர்மட்டத்தில் மின் பாவனையை பாதித்த 3 லட்சத்துக்கும் அதிகமான மின்பாவனையாளர்கள் தமது மின்பாவனையை 30-60 வரையான அலகுக்குள் மட்டுப்படுத்திக் கொண்டுள்ளார்கள். இதனால் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் நேரடிய-ாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபுறம் பாடசாலை கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பெற்றோரிடமிருந்து பணம் அறவிடப்பட்டு மின்கட்டணம் செலுத்தப்படுகிறது.

இதனை எவ்வாறு மின்விநியோகநெருக்கடிக்கு தீர்வுகண்டுவிட்டோம் என்று குறிப்பிடுவது. எரிபொருள் நுகர்வுக்கான கேள்வி சடுதியாககுறைவடைந்துள்ளதால் எரிபொருளுக்கான வரிசை குறைவடைந்துள்ளது.மக்கள் தமது தேவைகளை வரையறுத்துக் கொண்டுள்ளார்கள். இதனை பிரச்சினைகளுக்கு தீர்வு என்று குறிப்பிட முடியாது.

எரிபொருள்நுகர்வுக்கான கேள்வி சடுதியாக குறைவடைந்துள்ளதால் எரிபொவஞர்-;ருளுக்கான வரிசைகுறைவடைந்துள்ளது. மக்கள் தமது தேவைகளை வரையறுத்துக் கொண்டுள்ளார்கள். இதனை பிரச்சினைகளுக்கு தீர்வு என்று குறிப்பிட முடியாத -என்றார். (05)

# மஹிந்தவின் வீட்டிற்கு முன் குழப்பம் செய்த முன்னாள் இராணுவச் சிப்பாய் உடன் கைது

கொழும்பு - விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டிற்கு முன்னால் குழப்பத்தில் ஈடுபட்ட குற்றத்தில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஹொரபாவிட்டபமுனுகலபிரதேசத்தை சேர்ந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஆவார்.

குறித்த இராணுவச் சிப்பாய் மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டிற்கு முன்னாள் நின்று அவரை கொலை செய்வதாக கூறி கலவரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் கறுவாத்தோட்டம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த நபர் பொலிஸ் அதிகாரிகள்குழுவால்சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்தவர் என பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (05)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் காட்டுப்பன்றி இறைச்சி வைத்திருந்தவர் கைது

அனுராதபுரம்-ஹிதோகமபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் 5 கிலோ நிறையுடைய காட்டுப்பன்றி இறைச்சியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் ஹிதோகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் அனுராதபுரம் , ஹிதோகம, துருவில பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடைய-வராவார்.

ஹிதோகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குகிடைத்ததகவலின்பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைது செய்-யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைஹிதோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மட்டக்களப்பில் ரயிலினால் மோதுப்பட்டு இளைஞர் சாவு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குமாரபுரம் பிரதேசத்தில் ரயிலால் மோதப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மட்டக்களப்பு , குமாரபுரம் பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞராவார்.

இவர் மது போதையில் ரயில் பாதையில் சென்று கொண்டிருந்தார் எனப் பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலால் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின்சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வலு சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரசபையின்மறுசீரமைப்பு என்பது நாட்டில் நீண்டகாலமாக கருத்தாடலுக்குட்பட்ட விடயமாகும். மறுசீரமைப்பு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு கடந்ததிங்கட்கிழமைஅமைச்சரவை அங்கீகாரம் அளித்ததுடன் புதிய மின்சார சட்ட மூலத்திற்கும் அங்கீகாரம் வழங்கியது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் புதிய மின்சார சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய சட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் தொடர்பான கட்டமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் தவறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மின் உற்பத்தி செயற்பாடு தொடர்பான விடயங்களை 4 நிறுவனங்களின்ஊடாகநிறைவேற்ற நாம் முன்மொழிந்துள்ளோம். மேலும், நீர்மின்சாரம் குறித்த செயற்பாடுகள்100%எமதுஆட்சியின் கீழ்தொடர்ந்துமுன்னெடுக்கப்படும்.

மகாவலி, லக்ஷபான, சமனலவெள ஆகிய மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்ந்தும் அரசின் கீழ் இயங்குவதோடு, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை ஒருநிறுவனமாகவும் ஏனைய அனைத்து மின் உற்பத்தி நிலையங்களையும் ஒரே நிறுவனத்தின்கீழ்செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரிமாற்றுப் பணிகளை ஒரு தனி நிறுவனமாகவும், பிரதான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை 100சதவீதம்அரசின்கீழ்பேணவும் முன்மொழியப்பட்டுள்ளது. 04 விநியோக வலயங்களை 04 நிறுவனங்களாக மாற்றி அவற்றை செயற் திறன்மிக்க வகையில் செயற்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.

மின்சார சபையை மறுசீரமைப்பதன் மூலம் செயல்திறன், தரம் மற்றும் வீன் விரயத்தைக் குறைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. உலகின் பிற நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. விரிவாக ஆராயப்பட்ட பின்னர் பெறப்பட்ட துறைசார் நிபுணர்கள் உட்பட அனைவரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின்படி மறுசீரமைப்பு வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுத்தவும்ம் எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது மின்சார சபை 12 பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்றது. நீர்மின் நிலையப் பகுதிகளில்மழைபெய்துவருகின்றது. ஆனால்தற்போதுள்ளமழைவீழ்ச்சி காரணமாக மின்சார சபை இன்னும்இலாபகரமானநிலையை அடையவில்லை. டிசம்பர் மாதத்திற்குள் மின்சார சபையின் நிதிக் கணக்கீடு மூலம் செயல்பாட்டு இலாபம் கிடைத்தால்அதன் பலன் ஏப்ரல் மாத்தில் நுகர்வோருக்கு வழங்கப்படும்.

நீண்ட காலமாக கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுக்காததாலும், எடுத்த முடிவுகளை நீண்ட நாட்களாக நடைமுறைப்படுத்தாததாலும்நாடு பல மின் உற்பத்திநிலையங்களை இழந்துள்ளது. சாம்பூர்மின்உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பில் பல வருடங்களாக கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றது.

அதன் பின்னர் 2016ஆம் ஆண்டு சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டது. சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகளை 2020 இல் நிறைவுசெய்யதிட்டமிடப்பட்டிருந்தது. இந்தமின்உற்பத்திநிலையத்தினை நிர்மாணிப்பதால் வருடாந்தம் 95 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகின்றது.

அரசு என்ற வகையில், 05 பெரும் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் ஐந்து திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் கைச்சாத்திடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, அதானி காற்றாலை மின் உற்பத்தி நிலையம், சியம்பலாண்டுவவில் நிர்மாணிக்கப்படவுள்ள சோலார் பேனல் மின் உற்பத்தி நிலையம், ஹம்பாந்தோட்டை சோலார் பேனல் திட்டம், மட்டக்களப்பு மற்றும் பூனகரியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியஒப்பந்தங்கள்கைச்சாத்திடப்பட உள்ளன.

மேலும், மின் துண்டிக்கப்ட்ட பின்னர் மீண்டும் அதனை இணைப்பதற்கான கட்டணத்தை திருத்தம் செய்ய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி தற்போது 3000 ரூபாவாக இருக்கும் மீள் இணைப்புக் கட்டணத்தை 1000-2000 ரூபாவரைதிருத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## தம்மைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களை ஆதரித்திருந்தால் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே இதை நிறைவேற்றியிருக்கலாம்.

நாம்கடினமானபயணத்தையே மேற்கொண்டோம்.எவ்வாறாயினும் அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்களுக்கு10,000ரூபாகொடுப்பனவை வழங்க முடிந்துள்ளது.

இவ்வாறு செய்ய முடியும் என்று யாரும் நினைக்கவில்லை. மேலும், சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டது. இவைகடினமான நேரத்திலே செய்யப்பட்டன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான திட்டங்களின் மேம்பாட்டிற்காக பணத்தை வழங்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நான் அத்தோடு நிற்கவில்லை. இந்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு முடிந்த அளவு நிவாரணங்களை வழங்கவே நான் முயற்சிக்கிறேன். அதற்காக நாட்டில் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. நவீனமயமாக்கலின் முதல் படி உரிமையாகும்.

இதன்படி காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு முழு உரிமைகொண்ட காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம்எதிர்வரும்பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை மாவட்ட அபிவிருத்திக் குழுக்களிடம் ஒப்படைக்குமாறு பணிப்புரை வழங்கியுள்ளேன். இந்தத்திட்டத்திற்கு அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். இது யாராலும் செய்ய முடியாத காரியம். ஏனையவர்கள் வெறுமனே கதை பேசினார்கள். ஆனால் நாங்கள் அனைவரும் இணைந்து இவற்றை நடைமுறைப்படுத்தினோம்.

இந்தநாட்டின்இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். எமக்காக அல்ல, நம் குழந்தைகளுக்காக, குழந்தைகளின் குழந்தைகளுக்காக ஒரு நல்ல நாட்டை உருவாக்க வேண்டும். நாம்அவர்களுக்காகஇந்தநாட்டைக் கட்டியெழுப்புவோம். ஆனால் எதிர்க்கட்சிகள் தங்களைப் பற்றி மாத்திரமே கவலைப்படுகிறார்கள்.

எவ்வாறு ஆட்சியைப் பிடிப்பது என்று சிந்திக்கிறார்கள். அதிகாரத்தைப்பெறுவதற்கானசிறந்த வழிஎங்களுடன்இணைவதேஎன்று நான்அவர்களுக்குக்கூறுகின்றேன். எங்கள் அனுபவத்தைப் பெற்று அடுத்த முறை ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்குமாறு நான் அவர்களிடம் கூறுகிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பி முன்னோக்கிச் செல்வோம் என்றார்.

## முழு உரிமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்குள் அந்த நிதிகள் மீண்டும் எமக்குக்கிடைக்கும். அதன்படி, இந்த திட்டங்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக கலேவல - தம்புள்ள - ஹபரணை பிரதேசங்கள் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஹிங்குரக்கொட விமான நிலையத்தின் அபிவிருத்தியுடன் இப்பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. எனவே, இம்மூன்று நகரங்களும் ஒரு திட்டத்தின்படி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

நில மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து நில உரிமங்களும் காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றப்படும். அதன் முதல் கட்டமாக தம்புள்ளை விளையாட்டரங்கில் 10,000 காணி உறுதிகள் வழங்கப்படும். அத்துடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை கொழும்பில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டக் குழுக் கூட்டத்திலும் பணத்தை எப்படிச் செலவிடுவது என்பதுதான் கேள்வி. ஆனால், இந்தச் செலவுகளுக்கான பணத்தைஎப்படிப்பெற்றுக்கொள்வது என்பதுதான் எனக்குள்ள கேள்வியாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின்படி, எமக்கு இப்போதுபணத்தைஅச்சிடமுடியாது. மத்திய வங்கி சட்டத்தில் இருந்து அது நீக்கப்பட்டுள்ளது. மேலும்எங்களால் கடன் பெறவும் முடியாது. நாங்கள் செலுத்த வேண்டிய கடன் அதிகமாக உள்ளது. எனவே, எதிர்காலத்தில்நாம் வருமானம் ஈட்டுவதன் ஊடாகவே செயற்படவேண்டியுள்ளது.

மேலும், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வர்த்தகக் கையிருப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய எங்களுக்கு சரியானதிட்டங்கள்இருக்கவில்லை. குறிப்பாக அடுத்த வருடத்திலிருந்து இவ்விரு துறைகள் குறித்து நாம் விசேடகவனம்செலுத்தவேண்டும். அதன்படி, மாவட்ட அளவில் அரச வருமானத்தைஅதிகரிக்கவேண்டும்.

இதற்காக, நாட்டை விவசாய ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி மீண்டும் கொண்டு செல்ல வேண்டும். 1972க்குப் பிறகு விவசாயப் பொருளாதாரத்தை மறந்துவிட்டோம். சிறு தேயிலைத் தோட்டத் துறையின் வளர்ச்சியைத் தவிர, வேறு எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. எனவேதான் நாம் உடனடியாக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு திரும்ப வேண்டும்.

இதனை ஒரேயடியாக செயற்படுத்த முடியாவிட்டாலும் 05 முதல் 10 வருடங்களில் அந்த இலக்குகளை அடைய முடியும். கமநல சேவை மையங்களை, விவசாய நவீனமயமாக்கல் மையங்களாக மாற்ற வேண்டும். அதற்குத் தனியார் துறையினரின் பங்களிப்புகளையும் பெறவேண்டியுள்ளது. தற்போதுள்ள பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதுடன் புதிய பயிர்களை பயிரிடுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மாத்தளை மாவட்டம் விவசாயத்திற்கு சிறந்த மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மலையகப் பயிர்கள் மற்றும் ரஜரட்ட பயிர்கள் இரண்டையும் இங்கு பயிரிடலாம். எனவே, இந்தப் பிரதேசத்தை ஒரு புதிய திட்டத்தின்படி அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

பல நிறுவனங்கள் ஏற்கனவே கொகோபயிரிடுதல்தொடர்பில்முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. குவாத்தமாலாவிற்கு அடுத்தபடியாக இலங்கையில் தான் சிறந்த கொக்கோ உள்ளது. ஆனால் இப்போது இலங்கையில் கொக்கோ இல்லை. எனவே, மாத்தளை, கண்டி மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களில் மீண்டும் கொகோ பயிர்ச்செய்கையை பிரபலப்படுத்த எதிர்பார்க்கின்றோம். அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

அதன் பிறகு, கோபி பயிர்ச் செய்கை நோக்கித் திரும்ப எதிர்பார்த்துள்ளோம். மேலும், கறுவா பயிர்ச்செய்கைக்கு என்று ஒரு தனி பிரிவு தயாராகி வருகிறது. இவ்வாறு சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை ஒரு புதிய திட்டத்தின் மூலம் ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும்.

இது அரசாங்கத்தின் திட்டம் மாத்திரமன்றி, தனியார் துறையினரும்இதில்பங்களிக்கவேண்டும். அரச கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான நிலத்தை, அந்த கூட்டுத்தாபனங்களுக்கே நீண்ட காலத் குத்தகைக்கு விட திட்டமிட்டுள்ளோம். தென்னந் தோப்புகளை 60 வருடங்களுக்கும் ஏனையவை 40-50 வருடங்களுக்கும் குத்தகை செல்லுபடியாகும் வகையில் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த நிலங்களை இளம் விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைப்படி பயிர் செய்ய வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இளம் விவசாயிகளின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவும் எதிர்பார்த்துள்ளது. இவ்வாறு மாத்தளையை பிரதான விவசாய மாவட்டமாக மாற்றுவதே அரசாங்கத்தின்நோக்கம்என்பதைக் கூற வேண்டும்.

கல்வி தொடர்பிலும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும்மாணவர்களின்எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்தரத்திற்குப்பிறகு, இளைஞர்கள் தொழில்பயிற்சிக்குவழிகாட்டப்பட்டு, நாட்டில் பயிற்சி பெற்ற தொழிற்படையை உருவாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். அதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள 400 தொழிற்பயிற்சி நிலையங்களை இணைத்து ஒரு நிறுவனமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






## வட்டு. இளைஞன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடந்த இறப்பு விசாரணையின் போது வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்தராஜா அலெக்ஸின் உயிரிழப்பு ஒரு ஆட்கொலை என்கிற முடிவுக்கு வந்திருந்தார். அதனடிப்படையில் அதற்குக் காரணமான பொலிஸாரைக் கைது செய்யுமாறு அவர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்குத் தொடர்பில் ஏற்கனவே 4 பொலிஸாரைத் தாம் கண்காணிப்புக்குள் வைத்திருப்பதாக அன்றைய தினமே பொலிஸ் அதிகாரிகள் மன்றில் தெரிவித்திருந்தனர். நீதிவானின் உத்தரவுக்கமைய அந்த 4 பேரும் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிவான் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களை நாளை திங்கட்கிழமை வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அன்றைய தினமே அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்பவர் நவம்பர் 8 வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் அவரது நண்பருடன் சேர்த்து திருட்டுத் தொடர்பான சந்தேகத்திற்-திருட்டுச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு, நவம்பர் 12 மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். அதற்கு முன்னதாக அவர் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தவழக்கில் அலெக்ஸுடன் கைது செய்யப்பட்டவர் முக்கிய சாட்சியாக உள்ளார். சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அதைத் தொடர்ந்து சட்ட மருத்துவப் பரிசோதனை செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சித்திரவதைக் குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோகதர் உள்பட நால்வரும் நவம்பர் 19 முதல் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் யாழ்ப் பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் மற்றும் பொலிஸ் அணி குழு விசார ணைகளை முன்னெடுத்தது. அவர்களாலேயே சந்தேகநபர்களான பொலிஸார் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நாளை திங்கட்கிழமை மேலதிக விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் வருகை









மக்களின் நியாயமான கோரிக்கைகளும் யதார்த்தமான அபிலாசைகளும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சமூகத்தின் கோரிக்கைகளில் இருக்கின்ற யதார்த்தத்தை புரிந்துகொள்கின்றமையால், அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சமூகத்தின் அழைப்பை ஏற்று, கல்லூரிக்கு வெள்ளிக்கிக்கிழமை விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ், பாடசாலை சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள், கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்-

மகாஜனா கல்லூரியின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்ற இரண்டு ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை இரத்து செய்து தருமாறு என்னை வந்து சந்தித்த பாடசாலை சமூகத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எப்போதும் பெரும்பான்மை கருத்துக்களில் நியாயம் இருப்பின், அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனும் நிலைப்பாட்டை கொண்ட நான், பாடசாலை சமூகத்தினரின் பூரண ஆதரவு இருக்குமாயின், அதற்கு எனது ஒத்துழைப்பும் இருக்கும் என்பதைக் கூறியிருந்தேன்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில், இன்று உங்கள் முன்னிலையில் வந்திருக்கின்றேன். இந்தளவுக்கு பெருந்தொகையானோர் திரண்டு வந்து உங்களின் ஆதரவை வெளிப்படுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

உங்களின் எதிர்பார்ப்புக்களான இரண்டு சிரேஸ்ட ஆசிரியர்களும் இந்தப் பாடசாலையில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பினை நான் வழங்குவேன்.

இந்தப் பிரச்சினையை மாகாண மட்டத்தில் தீர்க்க முடியும் என்று நம்புகின்றேன். முடியாவிட்டால், மத்திக்கு எடுத்துச் சென்றாவது சாதகமான முடிவை பெற்றுத் தருவதற்குத் தயங்க மாட்டேன்.

என்னைப் பொறுத்தவரையில், மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு எதிரான அனைத்து தடைகளையும் உடைத்தெறிந்து அவற்றை நிறைவேற்றுவதே என்னுடைய அணுகுமுறையாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த விவகாரம் தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மகாஜனா கல்லூரி ஆகிய பாடசாலைகளின் நிர்வாகத்தினுள் மூக்கை நுழைத்து நான் குழப்பங்களை ஏற்படுத்துவதாக அநாமதேய சமூகஊடகங்களில் கருத்துக்கள் பரப்பப்பட்டன.

இவ்வாறான வசைபாடல்கள், சேறடிப்புக்கள் தொடர்பாக நான் அலட்டிக்கொள்வதில்லை. எனினும், பாடசாலை சமூகங்களால் அழைப்பு விடுக்கப்படுகின்ற நிலையிலேயே தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து வருகின்றேன்.

இதேபோன்று பத்து வருடங்களுக்கு முன்னர் உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பிலும் தலையிட்டு தீர்த்து வைத்திருந்தேன். இவ்வாறு பல உதாரணங்களை சொல்ல முடியும்.- என்று தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் பாடசாலை அதிபர், முன்னாள் அதிபர்கள், சில அயல்பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தங்களின் எதிர்பார்ப்பின் நியாயத்தை வெளிப்படுத்தினர்.

இதன்போது பாடசாலையின் உட்கட்டுமான வசதிகளை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாணவர்களுடனும் கலந்துரையாடினார். (05)

## படுக்கையில் உயிரிழந்து காணப்பட்டார் அம்பாறை வைத்தியசாலை வைத்தியர்

அம்பாறை பொது வைத்தியசாலையின்கண் பிரிவில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் அவர் தங்கியிருந்த தனியார் விடுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த மருத்துவர், அவர் பணிபுரியும் வைத்தியசாலைக்கு திட்டமிட்டபடி வராததால் வைத்தியசாலையைச் சேர்ந்தவர்கள் அவரது தொலைபேசிக்கு பலமுறை அழைத்தனர். இருப்பினும் அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து வைத்தியசாலையைச் சேர்ந்த இரு தாதிகள், குறித்த டாக்டர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றுள்ளனர்.

அதன்போது குறித்த வைத்தியர் படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்கும் நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் அம்புலன்ஸை வரவழைத்து அதன் மூலம் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். வைத்தியசாலையில் அவரைப் பரிசீலித்தபோது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## போதைப்பொருளுடன் ஒருவர் கம்பஹாவில் வைத்துக் கைது

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கம்பஹா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கம்பஹா - வத்துமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடையவராவார்.

கம்பஹா பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது 5 கிராம் 200 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## 100 கோடி ரூபாய் நட்டஈடு கோரி ஷானி அபேசேகர வழக்கு தாக்கல்

*குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஶானி அபேசேகர, தன்னைப் பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றத்தை முறையற்ற வகையில் வழிநடத்தி விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தனது சுயமரியாதைக்கு ஏற்பட்ட இழுக்குக்காக 100 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.*

*அந்த மனுவில், பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.*

*சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் ஊடாக, கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் ஷியாமின் கொலை தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிகள் குறித்து கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் தமக்கு எதிராக தீங்கிழைக்கும் நோக்கத்துடனும் பழிவாங்கும் நோக்கத்துடனும் விசாரணைகளை மேற் கொண்டனர் என ஶானி அபேசேகர தெரிவித்துள்ளார்.*

*(05)*

## இலங்கைக் குழந்தைகள் கடத்தப்பட்டு வெளிநாட்டவர்களுக்கு விற்பனையா?

### விசாரணைகள் மும்முரம்

இலங்கையில் குழந்தைகளை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனைசெய்யும் கும்பல் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தீவிரப் படுத்தியுள்ளது.

இந்த குற்றங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸிடம் தெரிவித்துள்ளனர்.

அதிகளவிலான குழந்தைகள் கண்டி பிரதேசத்தில் இருந்து கடத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பாக நோர்வேயில் இருக்கும் இலங்கை பிரஜை ஒருவரிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# 6 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 ஆபிரிக்க பிரஜைகளை விடுதலை செய்க

## கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவு

6 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 ஆபிரிக்க பிரஜைகளை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்துமாறு சட்டமா அதிபரிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் அறிவித்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30 ஆபிரிக்க பிரஜைகள் நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிசறை வெளிநாட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் கைப்பற்றப்பட்ட பொருள்களை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், அவர்களின் வெளிநாட்டு பயணத்தடையை நீக்கவும் உத்தரவிட்டார். (05)

# இலங்கை மின்சாரசபை நுகர்வோரிடம் பல மடங்கு பணத்தை சூறையாடுகிறது

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



இலங்கை மின்சாரசபை மின்சாரத்தை உட்பத்தி செய்ய செலவிடும்தொகையைவிடபலமடங்கு அதிகமாகவே நுகர்வோருக்கு மின்சாரம் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்தகாலத்தில்மின்சாரசபைக்கு ஏற்பட்டநடத்தைஈட்டிக்கொள்வதற்கே செயற்பட்டு வருகிறது என உதய கம்பன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

# தொடருந்து விபத்தில் பெண் உயிரிழப்பு

## களுத்துறையில் சம்பவம்

களுத்துறை வடக்கு பிரதேசத்தில் ரயிலால் மோதப்பட்டுபெண்ஒருவர்உயிரிழந்துள்ளார்எனக் களுத்துறைவடக்குபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுத்துறைவடக்குபிரதேசத்தை சேர்ந்த 72 வயதுடைய பெண் ஆவார்.

இவர் ரயில் பாதையை கடக்கும் போது தெற்கு களுத்துறையில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சிகிச்சைக்குச் சென்ற பெண் மீது பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம்

## அநுராதபுரத்தில் வைத்தியர் கைது

தனது தனியார் மருத்துவ மனைக்கு சிகிச்சைபெற வந்த 29 வயதுடைய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் வைத்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்அலுவலகத்தில்கடமையாற்றும்வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரால்புளியங்குளம் பிரதேசத்தில் நடத்தப்படும் வைத்திய நிலையத்தில் சிகிச்சைபெறச் சென்ற 29 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# 485 எய்ட்ஸ் நோய் தொற்றாளர்கள் ஒக்ரோபர் மாதத்தில் அடையாளம்

ஒக்ரோபர் மாதக் காலப்பகுதியில் புதிதாக 485 எயிட்ஸ் நோய் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய எயிட்ஸ்கட்டுப்பாட்டுதிட்டபணிப்பாளர், சமூக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜானகி விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

இதன்படி எச்ஐவி நோய் தொற்றாளர்களில்அதிகமானோர் பாடசாலை மாணவர்களும் , 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்களும் பதிவாகியுள்ளனர்.

2021 இல், 411 எச்ஐவி தொற்றாளர்களும் 2022 இல், 607 எச்ஐவி தொற்றாளர்களும் , 2022 இல் 4,100 எச்ஐவி தொற்றாளர்களும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 85 லட்சம் ரூபா மாணிக்கக்கல்லை திருடிய சீனப்பெண் தலை மறைவு

கொழும்பு 7 , கறுவாத்தோட்டத்தில் மாணிக்க கல் விற்பனை நிலையத்தில் இருந்த 85 லட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கல்லை திருடியதாக குற்றம்சாட்டப்பட்ட சீனப்பெண் தலைமறைவாகி உள்ளார் என கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு தலைமறைவாகி உள்ளவர் குறித்த மாணிக்கக் கல் விற்பனை நிலையத்தில் பணிபுரியும் சீனப்பெண் ஆவார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொன்னாலையில் கஞ்சா விற்றவர் விசேட அதிரடிப்படையினால் கைது

பொன்னாலையில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் எனக் கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை பகல் 1.30 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படையினரும் புலனாய்வாளர்களும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கை மூலம் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் அனலைதீவிலிருந்து வந்து பொன்னாலை தெற்கில் திருமணம் செய்து வாழ்ந்து வரும் ஒருவராவார்.

இவர், தன்வசம் வைத்திருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா பொதிகளும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட் டுள்ளன. (05)



# மறைத்து வைக்கப்பட்டுள்ள அரிசியை கையகப்படுத்த விரைவில் சட்டமூலம்

அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கும் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிகளை கையகப்படுத்தி சந்தைக்கு வழங்குவதற்கான சட்டமூலம் விரைவில் தயாரிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள சம்பா மற்றும் கீரி சம்பா கையிருப்புகளை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். இதன்காரணமாக இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த சட்டமூலம் தயாரித்து முடிக்கப்பட்டு அதனடிப்படையில் அரிசி இருப்புக்கள் கையகப்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார். இந்த சட்டமூலத்தை விரைவாக தயாரிப்பது தொடர்பில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சம்பா மற்றும் கீரி சம்பா அரிசிக்கான தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பருவத்தில், எட்டு லட்சம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டு, 2.7 மில்லியன் மெட்ரிக் டன் நெல் அறுவடை செய்யப்பட்டது. இந்நாட்டின் வருடாந்த அரிசித் தேவை 2.4 மில்லியன் மெற்றிக் தொன்களாகும். இதன்படி, நாட்டில் சுமார் 03 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி உபரியாக இருப்பதாக விவசாய அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது. (05)

# அரச வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

முழு அரச சேவையிலும் பாதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான 6 பேர் கொண்ட அதிகாரிகள் குழு, ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, அடையாளம் காணப்பட்ட மொத்த பொது சேவை வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து முந்நூற்று இருபத்து நான்கு ஆகும்.

ஆனால் 67 ஆயிரத்து 708 வெற்றிடங்கள் மிகவும் அத்தியாவசியமான வெற்றிடங்களாக முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்பட வேண்டியவை என சம்பந்தப்பட்ட குழு அமைச்சரவைக்கு பரிந்துரை செய்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் வரம்புகள் குறித்து எவ்வித கவனமும் செலுத்தாமல் கட்டுப்படியாகாத எண்ணிக்கையிலான மக்கள் அரச சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் அந்த குழுவிற்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளத்திற்கு ஏற்ற வகையில் எந்தவொரு பங்களிப்பும் அவர்கள் பெறுவதில்லை எனவும் சம்பந்தப்பட்ட குழு வெளிப்படுத்தியுள்ளது. (05)

# யாழ். பல்கலைக் கழகத்தில் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாவரவியல் துறைத் தலைவர் உட்பட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப்கப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானபீடத்தின்தாவரவியல்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஈ.சி.ஜெயசீலன் கணிதவியலும் புள்ளிவிவரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன் மற்றும் கலைப் பீடத்தின் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே.இராசநாயகம் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (சனிக்கிழமை) காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச்சுற்றறிக்கைநியமங்களுக்கு அமையதிறமைஅடிப்படையில்பேராசிரியர் பதவிக்குவிண்ணப்பித்தவர்களின்மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இந்தப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி தாவரவியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளரு மான கலாநிதி ஈ.சி. ஜெயசீலன் தாவரவியலில் பேராசிரியராகவும், கணிதவியலும் புள்ளிவிவரவியலும் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கண்ணன் கணிதவியலில் பேராசிரியராகவும், கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே.இராசநாயகம் கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (05)

# வவுனியா இரட்டை கொலை: சந்தேகநபர் ஒருவர் கைது

*வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் மரணமடைந்திருந்தனர்.*

*குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஆறு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.*

*இதன்போது, மேலும் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர்களைக் கைதுசெய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.*

*குறித்த மூவரும் தலைமறைவாக இருந்தமையால் அவர்களது கடவுச் சீட்டுகள் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைது செய்வதற்கான பகிரங்க பிடியாணை உத்தரவு கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.*

*இந்நிலையில், இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் சந்தேக நபர்களில் ஒருவர், ஹொரவப்பொத்தானை பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவரை கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.*

*இதேவேளை, வவுனியா, 4 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வீதியின் ஊடாகவும் செல்லும் சாத்தியம்

## முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி தகவல்













கொக்குதொடுவாய் மனித புதைகுழி, வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஐந்தாவது நாளாக இடம்பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம்0 கருத்து தெரிவிக்கையிலேஅவர்இவ்வாறுதெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐந்தாவது நாளாக தொடரும் கொக்குதொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக் கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக்கப் பட்டுள்ளது.

ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப்பட்டது இதன் முடிவுகள் இன்று அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும்.

இவ் புதைகுழி வீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனினும் இன்றைய பரிசோதனையின் பின்னரே இறுதி முடிவுகள் என்னால் உறுதியாக கூறமுடியும் என மேலும் தெரிவித்தார்.

(05)

# பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள் அமைச்சர் பந்துல சஜித்துக்கு சவால்



வரிக் குறைப்பு செய்ததால் ஒரே நாளில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. பொருளாதாரம் பாதிக்கப்பட்ட விதம் தொடர்பில் புள்ளி விவரங்களுடன் ஒப்புவிக்க எனக்கு முடியும்.

முடிந்தால் பகிரங்க விவாதத்துக்கு வாருங்கல் என அமைச்சர் பந்துல குணவர்தன எதிர்க்கட்சித் தலைவருக்கு சபையில் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் விடே கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு சவால் விடுத்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 101 (3) (1) இன் கீழ் அரசாங்கத்தின் நிதி தொடர்பான தெரிவுக்குழுவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தெரிவுக் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வாவே பதவி வகிக்கின்றார். அந்த அறிக்கையை நான் ஆராய்ந்து பார்த்துள்ளேன்.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இதுவரை நாடு முகங்கொடுத்திராத மிக மோசமான நெருக்கடி நிலையிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் விரிவானபொருளாதாரவேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கத்துக்கு நேரிட்டுள்ளது.

நீண்டகாலபலவீனமானபொருளாதார வேலைத்திட்டங்களே 2022 ஆம் ஆண்டு மோசமான பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானது.

அரசாங்கத்தின் நிதி வினைத்திறன் இன்மைமற்றும்வருமானத்தைமுறையாக சேகரிக்காமை ஆகிய காரணங்களே நிதி நெருக்கடி அதிகரிப்பதற்கு காரணமானது.

அதிக செலவுடன் கடன் பெற்றுக் கொள்வதில் தங்கியிருந்ததன் காரணமாக அரச கடன் முறையற்ற மட்டத்திற்கு தள்ளப்பட்டது. அதன் காரணத்தால் 2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தேசிய உற்பத்தி 128 வீதமாகியது.

சர்வதேச கடன் சந்தையில் பிரவேசிக்கும் நிலை இழக்கப்பட்டதால் அரசாங்கம் அரசின் நிதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்வதற்காக தேசிய ரீதியில் கடனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தது.

முக்கியமாக மத்திய வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால்2022ஆம்ஆண்டுசெப்ரெம்பர் மாதம் வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்துவதை ஒருதரப்பாக இடைநிறுத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அந்நிய செலாவணி மட்டுப் படுத்தப்பட்டதால் எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசியமான பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்த நிலையில் 2022 ஆம் ஆண்டு பொருளாதாரம் 7. 8 வீதமானது.

பொருளாதார நிலை தொடர்பில் நான் முழுமையாக புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளேன். அதனை வாசித்துப் பார்க்க வேண்டும்.

அந்த வகையில் பொருளாதாரம் தொடர்பான எந்த விவாதத்திற்கும் நான் தயார். எதிர்க்கட்சித்தலைவர்விரும்பினால் இது தொடரபாக பகிரங்க விவாதத்துக்கு வந்தால் அனைத்து விடயங்களையும் புள்ளி விவரங்களுடன் தெரிவிப்பேன். - என்றார்.

(05)

# எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி நாடாளுமன்றில் உரையாற்ற முடியும்

## பிரதமர் தினேஷ் உறுதி



*ஜனாதிபதி எந்தச் சந்தர்ப்பத்திலும் நாடாளு மன்றத்திற்கு வருகை தந்து சபையில் உரை யாற்ற முடியும் என்பது தெளிவாக அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனையாராலும் தடுக்க முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையையடுத்து ஆளும் கட்சி எதிர்க் கட்சிக்கிடையில் ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் ததாவது:*

*நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரைய-ாற்றுவதற்கு உள்ள அதே உரிமை ஜனாதிபதிக்கும் அரசமைப்பிற்கு இணங்க காணப்படுகிறது.*

*அதேவேளை அரசமைப்பின் 32 ஆவது அத்தியாயத்தின்படி எந்த சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வருகை தர முடியும். என்றும் அந்த வகையில் நாடாளுமன்ற அமர்வுகள், விசேட ஆரம்ப நிகழ்வுகள் அதனை பின்பற்றும் நிகழ்வுகளுக்கும் அவர் வருகை தரமுடியும்.*

*நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி, வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி சுமந்திரன் சபையில் தெரிவித்த உண்மைக்குப் புறம்பான கூற்று தொடர்பில் தெளிவுபடுத்தல் ஒன்றையே வழங்கினார்.*

*ஜனாதிபதி உரையாற்றுகையில் அனை வரும் அமைதியாக அதனைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஏனெனில் அரசமைப்பிற்கு இணங்கவே அவர் அந்த தெளிவூட்டலை வழங்கினார்.*

*எனினும் ஜனாதிபதிக்கு அவ்வாறு உரையாற்ற முடியாது என எதிர்க் கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு ஜனாதிபதியின் உரையை தடுப்பதற்கு எந்த உரிமையும் அவர்களுக்குக் கிடையாது. - என்றார்.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2023இல் வெளியிடப்பெற்றது.